5th August 1965]

முடிவு எடுக்கப்படாமல் திட்டம் நிறைவேறாத அளவுக்கு இருந்து வருகிறது. ஆகவே, குறிப்பிட்ட இடத்திற்காகக் காத்திராமல் வேறொரு தகுந்த இடத்தையாவது இப்போது எடுத்து, அங்கே தொழிற்பேட்டையை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்போது பார்த்தது, இரண்டாவதோ மூன்றாவதோ பார்க்கப்பட்ட இடம். இனியொரு இடம் பார்த்தாலும்கூட, இதே மாதிரி ரிட், இதே மாதிரி அப்ஜக்ஷன் எல்லாம் வரும். இதையெல்லாம் பார்க்கும்போது, சேலத்திலுள்ள மக்களுக்கு தொழிற்பேட்டை அமைப்பதில் அக்கறை இல்லையோ என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

* 89 கேள்வி.—திரு. ஆர். அப்துல் கலீல் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் ராணிப்பேட்டை தொகுதியில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒரு தொழிற்பேட்டை நிறுவும் திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கின்றதா ?

(இ) ஆம் எனில் அதன் விவரங்கள் என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) The proposals for inclusion in the Fourth Five-Year Plan have not yet been finalised. The location of the various Industrial Estates to be established during the Fourth Five-Year Plan period will be decided only at the time of sanctioning the specific schemes.

(b) The question does not arise.

* 90 கேள்வி.—திரு. ஆர். அப்துல் கலீல் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், சோளிங்கர் தொகுதியைச் சேர்ந்த காவேரிப்பாக்கத்தில், ஒரு தொழிற்பேட்டை நிறுவும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ?

(இ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும் ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) No.

(b) The question does not arise.

MR. SPEAKER : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II—NON-OFFICIAL BUSINESS

(i) BILLS

(1) *The Madras Agriculturists Relief (Amendment) Bill, 1965 (L.A. Bill No. 13 of 1965).*

திரு. அ. தியாகராசன் : கனம் சபாநாயகர் அவர்களே, 1965-ம் ஆண்டு தமிழ்நாடு உழவர்கள் இடருதவி (திருத்த) மசோதாவை (சட்டசபை மசோதா எண் 13-1965) ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று பிரேரேபிக்கிறேன்.